செ.வெ.எண்.341/2009/செமதொஅ நாள்:10.10.2009

**திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், கீரநல்லூர் ஊராட்சியில் 161 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புகள் கூடிய அடுப்பு, 8 நபர்களுக்கு தொகுப்பு வீடுகளும், 15 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, 1 நபருக்கு திருமண உதவித் தொகையும், 202 மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் வழங்கினார்.**

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், கீரநல்லூர் ஊராட்சியில் இலவச எரிவாயு இணைப்புகள் கூடிய அடுப்பு, தொகுப்பு வீடுகள், இலவச வீட்டுமனைப்பட்டா, திருமண உதவித் தொகை, மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் ஆகியவை வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு 161 குடும்பங்களுக்கு இலவச எரிவாயு இணைப்புகள் கூடிய அடுப்பும், 8 நபர்களுக்கு தொகுப்பு வீடுகளும், 15 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா, 1 நபருக்கு திருமண உதவித் தொகையும், 202 மாணவ-மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கி பேசியதாவது,

இந்த ஊராட்சியில் 270 குடும்பங்கள் வசிக்கின்றனர். அந்த குடும்பங்களில் 161 குடும்பங்களுக்கு இலவச எரிவாயுவுடன் கூடிய அடுப்பு வழங்கப்படுகிறது. மீதமுள்ள குடும்பங்களுக்கு விரைவில் வழங்கப்படும். வெள்ள நிவாரணத்தின் போது ரூ.1000 வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது. வெள்ளத்தின் போது பயிர்சேதம் ஏற்பட்டபோது ரூ.9 இலட்சம் விவசாயிகளுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தன்னிறைவு பெற வேண்டும் என்ற நோக்கத்தில் 12500 ஊராட்சிகளில் 9000 ஊராட்சிகளுக்கு தலா ரூ.20 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டு அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளது. அதேபோன்று உயிர் காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்து 1 கோடி குடும்பங்களுக்கு 1 லட்சம் வரை சிகிச்சை பெற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அனைத்து பகுதிகளிலும் அடையாள அட்டைக்கான புகைப்படம் எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த திட்டத்தில் சேர்ந்து அடையாள அட்டை பெற்று 52 விதமான சிகிச்சைகளுக்கு ரூ.1 லட்சம் வரை சிகிச்சைப் பெற்று பயன்பெறலாம். அதற்கான பிரிமிய தொகையை 570 கோடியை அரசே செலுத்தியுள்ளது. நாட்டில் உள்ள ஏழை-எளிய மக்கள் அனைத்து வசதிகளும் பெற்று வாழ வேண்டும் என்று அயராது பாடுபட்டு வருகிறார் டாக்டர் கலைஞர் அவர்கள் என கூறினார்.

விழாவில் கீரநல்லூர் ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.கற்பகம் அன்பரசன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் திரு.எஸ்.பன்னீர்செல்வம் தலைமையுரையாற்றினார். திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.டி.யசோதா, மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.த.துரைசாமி, ஒன்றியக்குழு தலைவர் திரு.வனமயில் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையுரையாற்றினர். முடிவில் ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் திருமதி.கலைவாணி மீனாட்சி சுந்தரம் அவர்கள் நன்றி கூறினார். விழாவில் எரிசக்தி மரபு சாரா ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.த.விசுவநாதன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.நிக்கோலஸ், ஒன்றியக்குழு உறுப்பினர் திரு.கே.சங்கர், வட்டாட்சியர் திரு.இரா.கந்தசாமி, வட்ட வழங்கல் அலுவலர் திரு.எஸ்.தனலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நா.சுரேஷ்குமார், திரு.பிரான்சிஸ் மைக்கேல், பள்ளி தலைமை ஆசிரியர் திரு.மதிவாணன் மற்றும் வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் ஏராளமாக கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.